




# பள்ளிக்கல்வித்துறை

## கன்னியாகுமரி மாவட்டம்

## மாநில அளவிலான பாரதியார் தின – குடியரசு தின புதிய விளையாட்டுப் போட்டிகள்

## 2022 –2023

09–02–2023 முதல் 12–02–2023 வரை



வாள் சண்டை



டேக்வாண்டோ



கடற்கரை கையுந்து பந்து





**அனுப்புநர்**
முனைவர் .அ.புகழேந்தி
முதன்மைக்கல்வி அலுவலர்
முதன்மைக்கல்வி அலுவலகம்
கன்னியாகுமரி மாவட்டம்
(இருப்பு) நாகர்கோவில் 629 001

**பெறுநர்**
அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி
அலுவலர்கள்

**ந.க.எண் : 76/ 2022 நாள் : 10.01.2023**

**பொருள்** : பள்ளிக்கல்வி – 2022 - 23 கன்னியாகுமரி மாவட்டம் - மாவட்ட அளவிலான நடைபெற்ற பாரதியார் தின/குடியரசு தின புதிய விளையாட்டுப்போட்டிகள் (டேக்வோண்டோ, வாள்வீச்சு, கடற்கரை கைப்பந்து ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நடத்திட அனுமதி வழங்கப்பட்டது – – தொடர்பாக

**பார்வை** : 1, அரசாணை எண் 175 பள்ளிக்கல்வி (பக7(2))த்துறை நாள் : 25.09.2019

2.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித் திட்டம்) செயல்முறைகள் நக எண் 13102/எம்/இ4/2022 நாள் 29.11.2022

........................ ........................

பார்வையில் காணும் செயல்முறைகள் அறிவுரை படியாக 2022- 23 ஆம் கல்வியாண்டில் பாரதியார் தின / குடியரசு தின விளையாட்டுப்போட்டிகள் அரசு/ அரசு உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ மாணவியர்களுக்கு மாநில அளவிலான புதிய விளையாட்டுப் போட்டிகளை நடத்திட தமிழக அரசால் உத்தரவு பெறப்பட்டுள்ளது. இதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை கையுந்துபந்து, வாள்சண்டை மற்றும் டேக்வாண்டோ ஆகிய போட்டிகளை 09.02.2023 முதல் 12.02.2023 வரை நடத்திட பார்வை 2ல் கண்டுள்ளவாறு **தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை ஆணையாளரால்** அறிவுரை பெறப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரிடம் மேற்காண் போட்டிகளை நடத்திட அனுமதி பெறப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்பட்ட இடங்களின் விபரம் பின்வருமாறு

| வ. எண். | நடைபெறும் நாள் | விளையாட்டுப்போட்டி விவரம் | தேர்வு செய்யப்பட்ட இடம் |
|---|---|---|---|
| 1. | 09.02.2023 முதல் 12.02.2023 வரை | கடற்கரை கையுந்துபந்து | பிள்ளைத்தோப்பு கடற்கரை |
| 2. | 09.02.2023 முதல் 12.02.2023 வரை | வாள்சண்டை | ஸ்டெல்லா மேரீஸ் பொறியியல் கல்லூரி, ஆறுதெங்கன்விளை, அழிக்கால் |
| 3. | 09.02.2023 முதல் 12.02.2023 வரை | டேக்வாண்டோ | ஸ்டெல்லா மேரீஸ் பொறியியல் கல்லூரி, ஆறுதெங்கன்விளை, அழிக்கால் |

இப்போட்டியில் பங்கு பெற தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வருகை தர இருக்கும் மாணவ மாணவிகள் அணி மேலாளர்கள், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள், நடுவர்கள் ஆகியோரை கன்னியாகுமரி மாவட்டம் சார்பில் அன்புடன் வரவேற்கிறோம். மேலும் . அனைத்து மாணவ மாணவிகளும் நடுவர்கள் அணி மேலாளர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவ மாணவிகள் எந்தவித சிரமமும் படாமல் சிறப்பான முறையில் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்து மாணவ மாணவிகளும் சுய கட்டுப்பாட்டுடன்விளையாட்டுப்போட்டியில் கலந்து கொள்வதுடன் தங்கள் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் நடந்து கொள்ளவும் போட்டிகளில் வெற்றி பெற வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன் .

இணைப்பில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் அறிவுரைகளைப் பின்பற்றி போட்டியில் பங்கேற்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

**இணைப்பு : விதிமுறைகள்**

11.01.23

**முதன்மைக்கல்வி அலுவலர்**
**கன்னியாகுமரி மாவட்டம்**

11/01

**நகல்**

1. இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித்திட்டம்)
   பள்ளிக்கல்வி ஆணையரகம், சென்னை 600 006
2. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர், சென்னை 600 006
3. முதன்மைக்கல்வி அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்
4. மாவட்டக்கல்வி அலுவலர்கள், நாகர்கோவில், மார்த்தாண்டம்
5. மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி)
6. மாவட்டக்கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)

# பாரதியார் தின / குடியரசு தின விளையாட்டுப்போட்டிகள்

# (RD/ BD NEW GAMES)

# கன்னியாகுமரி மாவட்டம்

**அணி மேலாளர்கள் கவனத்திற்கு**

1. அனைத்து அணி மேலாளர்களும் தங்கள் மாவட்டத்திலிருந்து பங்கு பெறும் மாணவிகளின் வருகையை 08.02.2023 அன்று மாலை 6.00 மணிக்குள் பதிவு செய்திட வேண்டும்.
2. மாணவர்களின் வருகையை 10.02.2023 அன்று மாலை 06.00 மணிக்குள் பதிவு செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 09.02.2023 முதல் 10.02.2023 வரை | மாணவிகள் மட்டும் (All Categories) | டேக்வாண்டோ, கடற்கரை கையுந்துபந்து, வாள்சண்டை |
| 11.02.2023 முதல் 12.02.2023 வரை | மாணவர்கள் மட்டும் (All Categories) | டேக்வாண்டோ, கடற்கரை கையுந்துபந்து, வாள்சண்டை |

3. டேக்வோண்டோ எடை சரிபார்ப்பு பணி, அணிகள் பதிவு செய்யும் போதே எடுக்கப்படும் எனவே வீரர்கள், வீராங்கனைகள் குறித்த நேரத்தில் ஆஜராகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
4. வீரர்கள், வீராங்கனைகள் தங்குவதற்கு தங்குமிடங்களில் தனித்தனியாக குழு ஒன்றிற்கு ரூபாய் 500/- வீதம் வைப்புத்தொகை செலுத்த வேண்டும் . அத்தொகை நிறைவு நாளன்று திரும்ப வழங்கப்படும்.
5. வீரர், வீராங்கனைகள் தாங்கள் தங்கும் இடத்தினை தூய்மையாக வைத்துக்கொள்வதுடன் எவ்வித சேதமும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சேதம் ஏற்படின் அணி மேலாளர்கள் முழு பொறுப்பேற்க வேண்டும்.மேலும் வைப்புத்தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது.

6. வீரர், வீராங்கனைகள் தங்கும் இடத்தில் அணி மேலாளர்கள் கண்டிப்பாக தங்க வேண்டும். அணி மேலாளர்களுக்கு மட்டும் தங்கவும் உணவு உண்ணவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

7. மாணவிகளுக்கான அணி மேலாளர்கள் கூட்டம் 08.02.2023 அன்று மாலை 8.00 மணிக்கும் மாணவர்களுக்கான அணி மேலாளர்கள் கூட்டம் 10.02.2023 அன்று மாலை 8.00 மணிக்கும் நடைபெறும்.

8.

| | | | |
|---|---|---|---|
| 09.02.2023 முதல் 10.02.2023 வரை | மாணவிகள் மட்டும் (All Categories) | டேக்வாண்டோ | அணி மேலாளர் 3 |
| | | கடற்கரை கையுந்துபந்து | அணி மேலாளர் 1 |
| | | வாள்சண்டை | அணி மேலாளர் 3 |
| 11.02.2023 முதல் 12.02.2023 வரை | மாணவர்கள் மட்டும் (All Categories) | டேக்வாண்டோ | அணி மேலாளர் 3 |
| | | கடற்கரை கையுந்துபந்து | அணி மேலாளர் 1 |
| | | வாள்சண்டை | அணி மேலாளர் 3 |

9. போட்டிகளில் பங்கு பெறும் வீரர், வீராங்கனைகள் மற்றும் நடுவர்கள்,அணி மேலாளர்கள் தவிர மற்றவர்கள் யாரும் மைதானத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

10. போட்டி நடைபெறும் காலம் குளிர்காலமாக இருப்பதால் போர்வை உட்பட தங்குவதற்குரிய உடைமைகளையும் போட்டியில் பங்கு பெறுவதற்குரிய உடைகள் , பாதுகாப்பு உபகரணங்களுடன் பங்கு பெற அறிவுரை வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். TaekWondo - Head Gear, Shin Guard, Arm Guard, Chest Guard, Abdomen Guard ------ Fencing - Jacket Under Arm Protector , Fencing Mask, Glouse , Chest Protector, Abdomen Guard, Blades with Proper Dress

11. போட்டிகளில் நடுவரின் தீர்ப்பே இறுதியானது எனவே ஒத்துழைப்பினை நல்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

12. 09.02.2023 மற்றும் 10.02.2023 மாணவிகளுக்கான விளையாட்டுப்போட்டிகளும் 11.02.2023 மற்றும் 12.02.2023 வரை மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டிகளும் நடைபெறும்.
13. மாணவிகளுக்கான விளையாட்டுப்போட்டிகள் நடைபெறும் நாட்களில் பெண்ஆசிரியைகள் மட்டுமே கண்டிப்பாக உடன் தங்க அனுமதிக்கப்படுவார்கள்.
14. மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் நடைபெறும் நாட்களில் ஆண்ஆசிரியர்கள் மட்டுமே கண்டிப்பாக உடன் தங்க அனுமதிக்கப்படுவார்கள்.
15. மேலும் Lock and Key கொண்டு வருதல் வேண்டும்.

போட்டிகள் நடைபெறும் நாட்களில் விளையாட்டு மைதானம் மற்றும் தங்கும் இடங்களில் எந்தவொரு இடையூறும் ஏற்படுத்தாமல் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்காண் அனைத்து தகவல்களையும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் அந்தந்த மாவட்ட பொறுப்பாளர்களுக்கும் விளையாட்டில் பங்கேற்கும் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கும் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட உடற்கல்விஆய்வாளர் (பொ)
கன்னியாகுமரி மாவட்டம்